



dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்






Vol: 02 | Issue: 318 | 4 Pages | 13.6.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 318 | 4 பக்கங்கள் | 13.6.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போற் போற்றாக் கடை

விளக்கம்:
மற்ற உயிரின் துன்பத்தை தன் துன்பம் போல் கருதிக் காப்பாற்றா விட்டால் பெற்றுள்ள அறிவினால் ஆகும் பயன் உண்டோ.

## விமான விபத்து: ஏர் இந்தியாவுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் போயிங் நிறுவனம்



காந்திநகர், ஜூன் 13

குஜராத் மாநிலம் அகமதாபாத் விமான நிலையத்தில் இருந்து இன்று மதியம் 1.38 மணிக்கு லண்டன் புறப்பட்ட 'ஏர் இந்தியா' பயணிகள் விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானது. விபத்தில் சிக்கிய 'ஏர் இந்தியா' நிறுவனத்தின் போயிங் 7878 டிரீம்லைனர் விமானத்தில் மொத்தம் 242 பேர் இருந்துள்ளனர்.

விமானத்தில் இருந்த பயணிகளில் 169 பேர் இந்தியர்கள், 53 பேர் இங்கிலாந்து நாட்டவர்கள், கனடாவை சேர்ந்தவர் ஒருவர் மற்றும் 7 பேர் போர்ச்சுகல் நாட்டை சேர்ந்தவர்கள் என 'ஏர் இந்தியா' நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், விமான விபத்தை தொடர்ந்து 'ஏர் இந்தியா' நிறுவனத்துடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதாக போயிங் நிறுவனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்நிறுவனத்தின் 'எக்ஸ்' வலைதள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது;

"விமான விபத்து தொடர்பாக ஏர் இந்தியாவுடன் நாங்கள் தொடர்பில் இருக்கிறோம். அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கிறோம். விபத்தில் சிக்கிய பயணிகள், விமான பணியாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட அனைவருடனும் எங்கள் எண்ணங்கள் உள்ளன."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விமான விபத்து: உயிரிழந்தவர்களை அடையாளம் காண டி.என்.ஏ. பரிசோதனை




அகமதாபாத்: ஜூன் 13

அகமதாபாத் விமான விபத்து குறித்து குஜராத் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறையின் கூடுதல் தலைமைச்செயலாளர் தனஞ்சய்திவேதி கூறியதாவது:

அகமதாபாத் விமானம் விபத்துக்குள்ளான பகுதியில் அரசு மருத்துவமனை மாணவர் விடுதி, ஊழியர்கள் குடியிருப்புகள் மற்றும் பிற குடியிருப்பு பகுதிகள் அமைந்துள்ளன. அந்தப் பகுதியில் வசிப்பவர்களும் காயமடைந்தனர். காயமடைந்த சுமார் 50 பேர் அகமதாபாத் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சிறந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

விமானத்தில் பயணித்தவர்களின் உறவினர்கள் மற்றும் காயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டவர்களின் உறவினர்கள் ஏதேனும் விசாரிக்க வேண்டுமானால், அகமதாபாத் அரசு மருத்துவமனை இரண்டு ஹெல்ப்லைன் எண்களை வெளியிட்டுள்ளது. அதன்படி எந்த உதவியாக இருந்தாலும், 6357373831 மற்றும் 6357373841 ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

பி.ஜே. மருத்துவமனையில் டி.என்.ஏ சோதனைக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனவே விமானத்தில் பயணித்தவர்களின் குடும்பங்கள் மற்றும் நெருங்கியவர்கள், குறிப்பாக அவர்களின் பெற்றோர் மற்றும் குழந்தைகள், தங்கள் டிஎன்ஏ மாதிரிகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் அடையாளம் காணப்படுவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## டெல்லி அருகே பயணிகள் ரெயில் தடம் புரண்டு விபத்து




டெல்லி, ஜூன் 13

ரெயிலின் நான்காவது பெட்டி திடீரென தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

தலைநகர் டெல்லியின் நிஜாமுதீனில் இருந்து காஜியாபாத் நோக்கி சென்ற பயணிகள் ரெயில் ஒன்று சென்றுகொண்டிருந்தது. அப்போது ரெயிலின் நான்காவது பெட்டி திடீரென தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என வடக்கு ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரெயில் விபத்தால் அப்பகுதி வழியாக செல்லும் பல ரெயில்கள் தாமதமானதோடு, சில ரெயில்கள் மாற்று பாதையில் இயக்கப்பட்டன. விபத்து குறித்து தகவல் அறிந்த ரெயில்வே ஊழியர்கள், மற்றும் தொழில்நுட்ப குழுவினர், கிரேன் உபகரணங்களுடன் சம்பவ இடத்தை வந்தடைந்தனர். தற்காலிகமாக பாதிக்கப்பட்ட பெட்டியை மீட்டெடுத்ததும், ரெயில் சேவைகள் இயல்பு நிலைக்கு திரும்பியது.

# மாநிலங்களவை தேர்தல்: திமுக, அதிமுக வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்வு

சென்னை, ஜூன் 13

தமிழகத்தில் மாநிலங்களவை உறுப்பினர்களாக இருக்கும் 18 பேரில் தி.மு.க.வை சேர்ந்த வில்சன், சண்முகம், அப்துல்லா, ம.தி.மு.க.வை சேர்ந்த வைகோ, அ.தி.மு.க.வை சேர்ந்த சந்திரசேகரன், பா.ம.க.வை சேர்ந்த டாக்டர் அன்புமணி ராமதாஸ் ஆகிய 6 பேரின் பதவிக்காலம் ஜூலை 24ந் தேதியுடன் முடிவடைகிறது.

அதனைத் தொடர்ந்து, புதிதாக 6 மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக வரும் 19ந் தேதி தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதற்கான வேட்புமனு தாக்கல்



கடந்த 2ந் தேதி தொடங்கியது. தி.மு.க. சார்பில் மக்கள் நீதி மய்ய தலைவர் கமல்ஹாசன், வில்சன், கவிஞர் சல்மா, எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் கடந்த 6ந் தேதி வேட்புமனு தாக்கல் செய்தனர். அதேபோல், அ.தி.மு.க. தரப்பில் ஐ.எஸ்.இன்பதுரை, தனபால் ஆகியோர் மனுதாக்கல் செய்தனர். மேலும்,சுயேச்சைகள் 7 பேரும் மனுத்தாக்கல் செய்தனர்.

இந்த நிலையில், மாநிலங்களவைக்கு தமிழ்நாட்டிலிருந்து திமுக, அதிமுக, ம.நீ.ம வேட்பாளர்கள் 6 பேரும் போட்டியின்றி முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வேட்பாளரின் பெயர் மற்றும் கட்சியின் பெயர் 1. ஐ.எஸ்.இன்பதுரை, அதிமுக, 2. கமல் ஹாசன், ம.நீ.ம

3. எஸ்.ஆர். சிவலிங்கம், திமுக

4. ம. தனபால், அதிமுக

5. ராஜாத்தி, திமுக, 6. பி. வில்சன், திமுக,

## அகமதாபாத் விமான விபத்து: மீட்பு பணிகளை விரைவுபடுத்த வேண்டும் அன்புமணி ராமதாஸ்

அகமதாபாத், ஜூன் 13

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் இருந்து இங்கிலாந்து தலைநகர் லண்டனுக்கு 230 பயணிகள் மற்றும் 12 பணியாளர்களுடன் இன்று பிற்பகலில் புறப்பட்டுச் சென்ற ஏர் இந்தியா விமானம் மெகானி நகர் பகுதியில் குடியிருப்பின் மீது விழுந்து தீப்பிடித்ததாக வெளியாகியுள்ள செய்திகள் பெரும் அதிர்ச்சியை அளிக்கின்றன.



அதிநவீன வசதிகளுடன் கூடிய போயிங் ட்ரீம் லைனர் விமானங்கள் விபத்துக்குள்ளாக வாய்ப்பு குறைவு என்று கூறப்பட்ட நிலையில், இந்த விபத்து பெரும் கவலை அளிக்கிறது. விமான விபத்தில் இதுவரை 140க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டதாக கூறப்படுகிறது. உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விபத்து நடந்த பகுதியில் மீட்புப் பணிகளை விரைவுபடுத்தி, அதன் மூலம் மீதமுள்ள பயணிகளை மீட்க வேண்டும்.


விபத்தில் சிக்கிய விமானத்தில் பயணித்த பிற பயணிகள் உயிருடன் காப்பாற்றப்பட வேண்டும் என்று இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.என தெரிவிக்கப்பட்டுள்ளது

## ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானது மிகுந்த வருத்தம் அளிக்கிறது விஜய்

சென்னை, ஜூன் 13

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து லண்டனுக்கு புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் இன்று மதியம் விபத்துக்குள்ளானது. இதனால் விமானத்தில் இருந்த 242 பயணிகளில் பலர் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. விபத்து நடந்த பகுதியில் தேசிய பேரிடர் மீட்புப் படையில் தொடர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். விபத்துக்கு பல்வேறு தரப்பினரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில்,



விமானவிபத்துக்கு தவெக தலைவர் விஜய் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

"242 பயணிகளுடன் சென்ற ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானது மிகுந்த வருத்தம் அளிக்கிறது.

உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல்கள். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன்." என அவர் தெரிவித்துள்ளார்.

## தேனி மாவட்ட கலெக்டர் தலைமையில் குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி

தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.R.சிவபிரசாத்,இ.கா.ப, அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஒருபோதும் எவ்வித பணிகளிலும் ஈடுபடுத்த மாட்டேன் எனவும், அவர்கள் பள்ளிக்குச் செல்வதை ஊக்குவிப்பேன் எனவும், குழந்தை தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும், தமிழ்நாட்டை குழந்தை தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு என்னால் இயன்றவரை பாடுபடுவேன் எனவும் உளமாற உறுதி அளிக்கிறேன். என்று அனைத்து காவல் நிலையங்களிலும் குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றனர்




## குலசாமி என்று கூறிக் கொண்டே.. என் நெஞ்சுக் குலையில் குத்துகிறார்கள் ராமதாஸ் வேதனை



விழுப்புரம், ஜூன் 13

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் மற்றும் அன்புமணி இடையே மோதல் நீடித்து வருகிறது. இந்த மோதல் முடிவுக்கு வராத நிலையில், வன்னியர் சங்க நிர்வாகிகள் நீக்கம், புதிய மாவட்டச்செயலாளர்கள் மற்றும் தலைவர்கள் நியமனம் தொடர்பான அறிவிப்புகள் தொடர்ந்து வெளியாகி வருகின்றன.

இந்நிலையில் , தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் இன்று செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

எனக்கும் செயல் தலைவருக்கும் இடையே இருக்கும் பிரச்சினை உங்களுக்கு தெரியாது. ஆளுமைகளின் சமரச பேச்சுவார்த்தை டிராவில் முடிந்தது, நான் இங்கே இருந்து கொண்டு கட்சியை வளர்ப்பது, அன்புமணி வெளியே சென்று கட்சியினரை பார்ப்பது என தீர்ப்பு சொன்னார்கள். என்னை நம்ப முடியாது என்று அன்புமணி சொல்லி விட்டார்

ஓரிரு ஆண்டுகள் பொறுத்திருந்தால் நானே அன்புமணிக்கு முடிசூட்டு விழா நடத்தியிருப்பேன். அன்று அமைதி காத்திருந்தால் அன்புமணிக்கு அதிகாரம் தானாக வந்திருக்கும்

அன்புமணியை கட்சியை விட்டு வெளியேற்ற நான் என்ன முட்டாளா?.. தந்தைக்கு பிறகே தனயன், அய்யாவுக்கு பிறகே அன்புமணி என்பதே எல்லோரும் சொல்லும் வார்த்தை. குருவுக்கு மிஞ்சிய சீடன் இருக்கலாம்; ஆனால் தந்தைக்கு மிஞ்சிய தனயன் கூடாது.

இதுவே நீதி, நேர்மை, தர்மம்.

என் கைகளைக்கொண்டே என் கண்ணை நான் குத்திக்கொண்டேன். என்னையே குறிவைத்து இலக்காக்கி தாக்குகின்றனர்

எல்லாம் அய்யாதான் என்று சொல்லிக்கொண்டே அதல பாதாளத்தில் தள்ள பார்க்கிறார்கள். குலசாமி என்று கூறிக் கொண்டே.. என் நெஞ்சு குலையில் குத்துகிறார்கள்


தலைவர் பதவியை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியும் அதனை அன்புமணி நம்பவில்லை. அய்யாவை நம்ப முடியாது. எழுதிக் கொடுக்கச் சொல்லுங்கள் என்றார். எனக்குள் இருந்த கோவம் பொங்கி எழுந்தது. நீயா? நானா? பார்த்திடுவோம் என முடிவெடுத்துவிட்டேன்.

பா.ம.க நிறுவனரான நான் வீட்டின் கேட்டை சாத்தி விட்டு இருக்க முடியாது. இன்னும் ஓரிரு ஆண்டுக்குள் தலைமை ஏற்க உரிமை இல்லையா? என்று கேட்பது எனக்கு அவமானமாக இருக்கிறது என்னை குல தெய்வம் என்று சொல்கிறார்கள், எனது தொண்டர்களை நான் வழிகாட்டியாக பார்க்கிறேன். 7 ஆண்டுகளுக்கு முன்னே கட்சியை நான் பார்த்துக்கொள்கிறேன் என்று அன்புமணி கூறினார்.அவருக்கு அப்போதே அந்த எண்ணம் இருந்திருக்கிறது

இவ்வாறு ராமதாஸ் கூறினார்.



# அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவர் சேர்க்கை: இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்




தூத்துக்குடி ஜூன் 13

தூத்துக்குடி கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

2025ஆம் ஆண்டில் தூத்துக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்க்கை செய்திட இணையதளம் வாயிலாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பங்கள் பதிவு செய்ய வேண்டும். இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க மாணவர்களுக்கு உதவிடும் வகையில், மாநிலம் முழுவதும் உள்ள சேர்க்கை மையங்களின் பட்டியல் மற்றும் தொழிற்பிரிவுகள் விவரம் மேற்குறித்த இணையதள முகவரியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வித்தகுதி: எட்டாம் வகுப்பு / பத்தாம் வகுப்பு

விண்ணப்பக்கட்டணம்: விண்ணப்பக் கட்டணத்தொகையானரூ.50ஐ விண்ணப்பதாரர் Debit Card/Credit Card/Net Banking/GPay வாயிலாக மட்டுமே செலுத்த வேண்டும்.

இணையதளம் வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய கடைசி நாள்: 13.6.2025.

விண்ணப்பிக்க விரும்புவோர் 8ஆம் வகுப்பு/ பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், மாற்றுச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ், பாஸ்போர்ட் அளவு புகைப்படம், ஆதார் அட்டை ஆகியவற்றின் அசல் மற்றும் ஒரு நகல்களுடன் தூத்துக்குடி மாவட்டம், கோரம்பள்ளத்திலுள்ள தூத்துக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையம் (0461 2340133/9499055810), நேரில் வந்தும் விண்ணப்பிக்கலாம்.

மேலும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசு வழங்கும் விலையில்லா உபகரணங்கள் வழங்கப்படுகிறது. அதன்படி மாதந்தோறும் உதவித்தொகை ரூ.750, கட்டணமில்லா பஸ் பாஸ், இலவச சைக்கிள், பாடப்புத்தகங்கள், வரைபடக்கருவிகள், சீருடை, காலணி, பயிற்சிக்குத் தேவையான விலையில்லா உபகரணங்கள் வழங்கப்படுவதாகவும், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவர்களுக்கு இலவச உண்டி, உறைவிட வசதியும் உள்ளது எனவும், தகுதியுள்ள மாணவ மாணவியர்களுக்குதமிழகஅரசின் தமிழ்ப்புதல்வன் திட்டம் மற்றும் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுமிக்கு பாலியல் தொல்லை: ஆட்டோ டிரைவர் போக்சோ சட்டத்தில் கைது




தூத்துக்குடி ஜூன் 13

திருச்செந்தூர் அருகே மேலபள்ளிபத்து பகுதியை சேர்ந்த அரிச்சந்திரன் (வயது 43) ஆட்டோ டிரைவர் ஆவார். இவர் மே 24ம்தேதி உறவினர் வீட்டுக்கு சென்றுள்ளார். அங்கு வீட்டில் தனியாக இருந்த உறவினரின் 14 வயது சிறுமியை கையை பிடித்து இழுத்து பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த சிறுமி அலறியுள்ளார்.

உடனடியாக அரிச்சந்திரன் அந்த சிறுமியை மிரட்டி விட்டு, வீட்டிலிருந்துதப்பி ஓடிவிட்டாராம். இதனால் பாதிக்கப்பட்ட சிறுமி பயந்து போய் வெளியே சொல்லாமல் இருந்ததாக கூறப்படுகிறது. இதற்கிடையில் பள்ளி விடுமுறைக்கு தனது பாட்டி வீட்டுக்கு சிறுமி சென்றுள்ளார். விடுமுறை முடிந்து ஜூன் 1ம்தேதி ஊருக்கு திரும்பியுள்ளார். கடந்த ஜூன் 8ம்தேதி காலையில் மேலப்பள்ளிபத்து பஸ் நிறுத்தத்தில் சிறுமி நின்றுள்ளார்.

அப்போது அங்கு வந்த அரிச்சந்திரன், பாலியல் தொல்லை குறித்து வெளியே சொல்லக்கூடாது என மீண்டும் சிறுமியை மிரட்டிவிட்டு சென்றாராம். இதை தொடர்ந்து அந்த சிறுமி பெற்றோரிடம், உறவினரின் பாலியல் தொல்லை, மிரட்டல் குறித்து தெரிவித்துள்ளார். அதிர்ச்சி அடைந்த பெற்றோர் சிறுமியுடன் சென்று திருச்செந்தூர் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளனர்.

இதுகுறித்து அந்த போலீசார் விசாரணை நடத்தி போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து அரிச்சந்திரனை கைது செய்தனர்.

# தோழி படிக்கும் பள்ளியில் சேர்க்காததால் 9ம் வகுப்பு மாணவி தற்கொலை



மதுரை ஜூன் 13

மதுரை தல்லாகுளம் விசாலாட்சிபுரம் பகுதியைச் சேர்ந்தவர் பிரியா (39 வயது). இவரது கணவர் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்ட நிலையில், அவர் தனது 2 மகன்கள் மற்றும் மகளுடன் வசித்து வந்தார். பிரியாவின் மகள் அர்ச்சனா (14 வயது), அந்தப் பகுதியில் உள்ள பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்தார்.

இந்த நிலையில் அர்ச்சனாவின் தோழி மதுரையில் உள்ள தனியார் பள்ளிக்கு மாறியதாக தெரிகிறது. இதனால் தன்னையும் தோழி படிக்கும் பள்ளியில் சேர்த்துவிடுமாறு அர்ச்சனா கூறியுள்ளார். இதற்கு பிரியா மறுப்புதெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில், அர்ச்சனா தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவம் தொடர்பாக தல்லாகுளம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரசுப் பேருந்தில் பயணிக்கும் மகளிரை ஓசி பயணம் செய்வதாக இழிவுபடுத்துவதா? டி.டி.வி. தினகரன் கண்டனம்



சென்னை ஜூன் 13

தேனி மாவட்டம் மண்ணூத்து பகுதியில் புதிதாக கட்டப்பட்ட சமுதாய நலக்கூடத்தை திறந்து வைத்து பேசிய ஆண்டிப்பட்டி தி.மு.க. எம்.எல்.ஏ. மகாராஜன், "மக்களின் மனம் அறிந்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதில் ஒன்று மகளிர் விடியல் பயணத் திட்டம். நான் முன்பு கூறியதுபோல், பெண்கள் அனைவரும் அரசு பஸ்சில் 'ஓசி'யில் ஏறி தேனி, ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி என பல்வேறு பகுதிகளுக்கு செல்லுங்கள். வீட்டில் உள்ள ஆண்கள் சமையல் செய்யட்டும்" என்று கூறினார்.

கட்டணமின்றி அரசு பேருந்துகளில் பெண்கள் பயணம் செய்வதை 'ஓசி' என்று விமர்சித்த தி.மு.க. எம்.எல்.ஏ.வின் பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தாலுக்காவிற்கு உட்பட்ட கடமலைக்குண்டு அருகே மலைக்கிராமம் ஒன்றில் சமுதாயக் கூடத்தை திறக்க வந்த தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன், அப்பகுதி பெண்கள் அனைவரும் ஓசி பேருந்தில் பயணியுங்கள் என கிண்டலாக பேசிய வீடியோ காட்சிகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே, தாய்மார்களை ஓசி பேருந்தில் பயணிப்பதாக நக்கலடித்து சிரித்த அமைச்சர் ஒருவர் தன் பதவியை இழந்த நிலையிலும், மகளிர் மீதான அக்கட்சியினரின் எண்ணம் துளியளவும் குறையவில்லை என்பதையே ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜனின் இன்றைய பேச்சு வெளிப்படுத்துகிறது.

மகளிர் உரிமைத் தொகை எனும் பெயரில் மாதம் தோறும் ஆயிரம் ரூபாயை கொடுத்துவிட்டு மறைமுகமாக பல ஆயிரம் ரூபாயை வசூல் செய்வதையும், பேருந்தில் இலவச பயணம் என அறிவித்துவிட்டு அதில் பயணிக்கும் மகளிரை தரக்குறைவாக விமர்சிப்பதையும் வாடிக்கையாக கொண்டிருக்கும் தி.மு.க.வினரின் ஆணவப்போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

எனவே, நலத்திட்டங்கள் எனும் பெயரில் தமிழகத்தின் தாய்மார்களை இழிவுபடுத்துவதையும், அவர்களை அவமானப்படுத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருக்கும் தி.மு.க.விற்கும், அதன் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அடுத்து வரும் சட்டமன்ற தேர்தலில் ஒட்டுமொத்த மகளிரும் இணைந்து முடிவுரை எழுதுவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# 7 கிலோ புகையிலை பொருட்கள் பறிமுதல்: 2 பேர் கைது




திருநெல்வேலி ஜூன் 13

திருநெல்வேலி மாவட்டம், மானூர், நடுபிள்ளையார்குளம் அருகே சப் இன்ஸ்பெக்டர் சஜுவ் தலைமையிலான போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சந்தேகப்படும்படி நான்கு சக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்த நடுபிள்ளையார்குளம், வடக்கு தெருவை சேர்ந்த மகாராஜன் (வயது 31) என்பவரை போலீசார் சோதனை செய்தனர். அப்போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து சப்இன்ஸ்பெக்டர், மகாராஜனை கைது செய்தார். மேலும் அவரிடமிருந்து 5 கிலோ 216 கிராம் புகையிலை பொருட்களையும் ஒரு நான்கு சக்கர வாகனத்தையும் பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்தார்.

இதேபோல், கங்கைகொண்டான், துறையூர் அருகே சப்இன்ஸ்பெக்டர் அபினேஷ் தலைமையிலான போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த ராஜபதி, கிழக்கு தெருவை சேர்ந்த மாசானம்(40) என்பவரை போலீசார் சோதனை செய்தனர்.

அப்போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து சப் இன்ஸ்பெக்டர், மாசானத்தை கைது செய்தார்.

மேலும் அவரிடமிருந்து 2 கிலோ 250 கிராம் புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்தார்.

# அதிகார மமதையில் எளிய மக்களை ஏளனப்படுத்துவது ஏற்புடையதல்ல நயினார் நாகேந்திரன் கண்டனம்



சென்னை ஜூன் 13

தேனி மாவட்டம் மண்ணூத்து பகுதியில் புதிதாக கட்டப்பட்ட சமுதாய நலக்கூடத்தை திறந்து வைத்து பேசிய ஆண்டிப்பட்டி தி.மு.க. எம்.எல்.ஏ. மகாராஜன், "மக்களின் மனம் அறிந்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதில் ஒன்று மகளிர் விடியல் பயணத் திட்டம். நான் முன்பு கூறியதுபோல், பெண்கள் அனைவரும் அரசு பஸ்சில் 'ஓசி'யில் ஏறி தேனி, ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி என பல்வேறு பகுதிகளுக்கு செல்லுங்கள். வீட்டில் உள்ள ஆண்கள் சமையல் செய்யட்டும்" என்று கூறினார்.

கட்டணமின்றி பேருந்துகளில் பெண்கள் பயணம் செய்வதை 'ஓசி' என்று விமர்சித்த தி.மு.க. எம்.எல்.ஏ.வின் பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அவரது பேச்சுக்கு தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

கட்டணமின்றி பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிரை "ஓசி" என்று தி.மு.க.வைச் சார்ந்த ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜா விமர்சித்திருப்பது கண்டனத்துக்குரியது. இதற்கு முன் முன்னாள் தி.மு.க. அமைச்சர் பொன்முடியும் இதே போன்று பேருந்துகளில் கட்டணமின்றி பயணிப்போரை "ஓசி" என்று தரம் தாழ்ந்து விமர்சித்ததும், தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் "ரூ.1,000 வாங்கியதால் தானே பளபளனு இருக்கீங்க" என்று பெண்களைக் கொச்சையாக விமர்சித்ததும், திமுக மூத்த அமைச்சர் துரை முருகன் "அம்மாவுக்கும் ரூ.1,000, பொண்ணுக்கும் ரூ.1,000" என சபை நாகரிகமன்றி விமர்சித்ததும் குறிப்பிடத்தக்கது.

மக்கள் நலனை மேம்படுத்தும் போர்வையில் திட்டங்களை அமல்படுத்தி அதன் விளம்பரங்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதும், பின் பயனாளிகளை "ஓசி" என்று கீழ்த்தரமாக விமர்சிப்பதும் தான் திராவிட மாடல் போலும்!

ஒவ்வொரு முறையும் பெண் பயனாளிகளை விமர்சிப்பதில் காட்டும் முனைப்பை ஓட்டை உடைசலாக இருக்கும் பேருந்துகளை சரிபடுத்துவதிலோ அல்லது அனைத்து மகளிருக்கும் 1,000 ரூபாய் கிடைப்பதைஉறுதிசெய்வதிலோ தி.மு.க. தலைவர்கள் காட்டாதது ஏன்?

அதிகார மமதையில், எளிய மக்களை எள்ளி நகையாடி ஏளனப்படுத்துவது ஏற்புடையதல்ல! மகளிரை அவமதிக்கும் தி.மு.க. அரசு இனியாவது திருந்தட்டும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ரெயில் பயணத்தில் விரைவில் புதிய மாற்றம்.. 24 மணி நேரத்திற்கு முன் பயணிகளின் பயண பட்டியல்



சென்னை, ஜூன் 13

எக்ஸ்பிரஸ் ரெயில்களில் பயணம் செய்யும் பயணிகள் உறுதிப்படுத்தப்பட்ட பட்டியலை ரெயில்வே நிர்வாகம் தற்போது ரெயில் புறப்படுவதற்கு 4 மணி நேரத்திற்கு முன்பு வெளியிட்டு வருகிறது. இதனால் காத்திருப்பு பட்டியலில் உள்ள பயணிகள், ரெயில்களை பிடிக்க தொலைதூரத்தில் இருந்து வரும் பயணிகள் ரெயில்வே இறுதிப்பட்டியல் வெளியிடும் வரை தங்கள் டிக்கெட் நிலை குறித்து தெரியாமல் உள்ளனர்.

ரெயில் பயணிகளிடையே நிலவும் பதற்றத்திற்கு தீர்வு காணும் வகையிலும், பயணிகளுக்கு விரைந்து தகவல் செல்லும் வகையிலும் ரெயில் புறப்படுவதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பே உறுதிப்படுத்தப்பட்ட இருக்கைகளுடன் கூடிய பயணிகள் அட்டவணைகளை வெளியிடுவதற்கான வழிமுறையை ரெயில்வே உருவாக்கி வருகிறது.

இந்த நடைமுறை தற்போது ராஜஸ்தானில் கடந்த 6ந்தேதி முதல் சோதனை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. அதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் சரி செய்யப்பட்டு இந்த திட்டம் அமல்படுத்தப்பட உள்ளதாக ரெயில்வே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# தமிழ்நாட்டில் 18 போலீஸ் உயர் அதிகாரிகள் இடமாற்றம்




சென்னை ஜூன் 13

தமிழகம் முழுவதும் 18 போலீஸ் உயர் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 3 பேர் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள உத்தரவில் கூறப்பட்டுள்ளதாவது:

இடமாற்றம்:

1) மகேஷ்குமார் டி.ஐ.ஜி. ஆக இருக்கும் இவர், காத்திருப்போர் பட்டியலில் இருந்தார். தற்போது கடலோர பாதுகாப்புக் குழும டி.ஐ.ஜி. ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

2) ஜெயந்தி கடலோர பாதுகாப்புக் குழும டி.ஐ.ஜி. ஆக பணியாற்றும் இவர், சென்னை தொழில்நுட்பப்பிரிவு டி.ஐ.ஜி. ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

3) சிபி சக்கரவர்த்தி தென்சென்னை இணை கமிஷனராக பணியாற்றும் இவர், தமிழ்நாடு காகித ஆலை தலைமை விஜிலென்ஸ் அதிகாரியாக பொறுப்பேற்க உள்ளார்.

4) கல்யாண் சென்னை மேற்கு மண்டல இணை கமிஷனராக உள்ள இவர், தெற்கு மண்டல இணை கமிஷனராக பதவியேற்க உள்ளார்.

5) திஷாமிட்டல் விழுப்புரம் சரக டி.ஐ.ஜி. ஆக உள்ள இவர், சென்னை மேற்கு மண்டல இணை கமிஷனராக மாற்றப்பட்டுள்ளார்.

6) உமா சேலம் சரக டி.ஐ.ஜி. ஆக பணியாற்றும் இவர், விழுப்புரம் சரக டி.ஐ.ஜி. ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

7) நாகஜோதி மாநில குற்ற ஆவண காப்பக சூப்பிரண்டான இவர், தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணைய சூப்பிரண்டாக பொறுப்பேற்க உள்ளார்.

8) அமனத்மான் காத்திருப்போர் பட்டியலில் உள்ள இவர், மனித உரிமை மற்றும் சமூகநீதி உதவி ஐ.ஜி. ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

9) லாவண்யா போலீஸ் பயிற்சி கல்லூரி முதல்வராக சென்னையில் பணியாற்றும் இவர், மாநில குற்ற ஆவண காப்பக சூப்பிரண்டாக மாற்றப்பட்டுள்ளார்.

10) பி.கீதா சேலம் தலைமையக துணை கமிஷனராக பணியில் உள்ள இவர், சென்னை தலைமையக துணை கமிஷனராக பதவியேற்க உள்ளார்.

11) வி.கீதா திருநெல்வேலி மேற்கு துணை கமிஷனராக உள்ள இவர், சேலம் தலைமையக துணை கமிஷனராக பொறுப்பேற்க உள்ளார்.

12) வேல்முருகன் சேலம் தெற்கு துணை கமிஷனராக பணியாற்றும் இவர், தாம்பரம் கமிஷனரகத்தில் மத்திய குற்றப்பிரிவு துணை கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

13) பிரபாகர் தாம்பரம் கமிஷனரகத்தில் மத்திய குற்றப்பிரிவு துணை கமிஷனராக உள்ள இவர், சென்னை சைபர் குற்றப்பிரிவு சூப்பிரண்டாக பதவியேற்க உள்ளார்.

14) அருண் கபிலன் நாகப்பட்டினம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டான இவர், சென்னை டி.ஜி.பி. அலுவலகத்தில் தலைமையக உதவி ஐ.ஜி. ஆக பதவியேற்க உள்ளார்.

15) செல்வக்குமார் மதுரை சிவில் சப்ளை சி.ஐ.டி. சூப்பிரண்டாக பணியாற்றும் இவர், நாகப்பட்டினம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவி உயர்வுடன் இடமாற்றம்:


16) சுப்பிரமணிய பாலச்சந்திரா தேனி உதவி போலீஸ் சூப்பிரண்டாக பணியாற்றும் இவர், பதவி உயர்வு பெற்று சேலம் தெற்கு துணை கமிஷனராக மாற்றப்பட்டுள்ளார்.

17) சாமுவேல் பிரவீன் கவுதம் கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் உதவி போலீஸ் சூப்பிரண்டாக பணிபுரியும் இவர், பதவி உயர்வு பெற்று, திருப்பூர் நகர வடக்கு துணை கமிஷனராக பதவியேற்க உள்ளார்.

18) பிரசன்னகுமார் நாங்குநேரி உதவி போலீஸ் சூப்பிரண்டாக உள்ள இவர், பதவி உயர்வு பெற்று நெல்லை மேற்கு துணை கமிஷனராக பொறுப்பேற்க உள்ளார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்செந்தூர் கும்பாபிஷேகம் சிறப்பு பணிக்கு 300 பேர் நியமனம்



தூத்துக்குடி, ஜூன் 13

திருச்செந்தூர் சுப்பிரமணியசாமி கோவிலில் ஜூலை 7ம் தேதி கும்பாபிஷேகம் நடப்பதையொட்டி சென்னை, பழநி, திருப்பரங்குன்றம், மதுரை, உள்ளிட்ட கோவில்களில் இருந்து 300 பேரை ஜூலை 1ம் தேதி முதல் 8ம் தேதி வரை பணியில் அமர்த்தி அறநிலையத்துறை உத்தரவிட்டுள்ளது.

முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடாக திருச்செந்தூர் உள்ளது. இந்த கோவிலுக்கு தினமும் பல ஆயிரம் பக்தர்கள் வந்து கடலில் புனித நீராடி சுவாமியை வழிபட்டு செல்கின்றனர்.

இந்நிலையில், சுமார் 12 ஆண்டுகளுக்கு பிறகு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கும்பாபிஷேம் நடக்க உள்ளது.

ஜூலை 7 ம் தேதி காலை 6.15 மணி முதல் 6.50 மணிக்குள் கும்பாபிஷேகம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# நீலகிரி: சுற்றுச்சுவரை உடைத்த காட்டு யானை



நீலகிரி, ஜூன் 13


நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் காட்டு யானைகள் தினமும் ஊருக்குள் வந்து அட்டகாசம் செய்து வருகின்றன. வனத்துறையினர் யானைகளை விரட்டும் பணியில் ஈடுபட்டாலும், தொடர்ந்து ஒவ்வொரு பகுதிக்கு இடம்பெயர்ந்து விவசாய பயிர்களை சேதப்படுத்துவது, பொது மக்களின் உடைமைகளை நாசம் செய்வது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகிறது.

9ந் தேதி இரவு கூடலூர் நகராட்சிக்கு உட்பட்ட நடுக்கூடலூர் பகுதியில் காட்டு யானை ஊருக்குள் புகுந்தது. பின்னர் அப்பகுதியில் உள்ள சுற்றுச்சுவரை உடைத்துக் கொண்டு சென்றது. தொடர்ந்து அப்பகுதியில் முகாமிட்டதால், பொதுமக்கள் அச்சமடைந்தனர். இது குறித்து பொதுமக்கள் கூறும்போது, காட்டு யானையால் இரவு நிம்மதியாக தூங்க முடியாத நிலை உள்ளது. இதனால் வனத்துறையினர் யானை ஊருக்குள் வராமல் தடுக்க நிரந்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# திருவண்ணாமலை: கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க எதிர்ப்பு 2 நாளாக பள்ளி புறக்கணிப்பு போராட்டம்

திருவண்ணாமலை, ஜூன் 13

திருவண்ணாமலை மாவட்டம் அய்யம்பாளையம் பகுதியில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு அப்பகுதியை சேர்ந்த மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பான போராட்டங்களையும் அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.




இந்நிலையில், போராட்டத்தின் ஒரு பகுதியாக, அப்பகுதியை சேர்ந்த பெற்றோர் தொடர்ந்து 2வது நாளாக தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பாமல் புறக்கணித்துள்ளனர். ஒரு சில மாணவர்கள் மட்டும் பள்ளிக்கு வந்ததால் ஆசிரியர்கள் அதிருப்தி அடைந்தனர். இது குறித்து தகவல் அறிந்து வந்த உள்ளாட்சி அமைப்பு அதிகாரிகள், ஊர்மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்துவதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

# அரசு மருத்துவமனையில் ஜன்னல் கண்ணாடி உடைப்பு; விபத்தில் உயிரிழந்தவரின் உறவினர்கள் ரகளை

திண்டுக்கல், ஜூன் 13

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே ஒத்தக்கடை பகுதியை சேர்ந்தவிஜயராகவன்(30) என்பவர் புதுரோட்டில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். அவருக்கு இன்று பிறந்த நாள் என்று கூறப்படுகிறது. இதையொட்டி எரியோடு பகுதியில் உள்ள இறைச்சி கடையில் கறி வாங்கி விட்டு வீட்டிற்கு சென்ற போது, அவரது இருசக்கர வாகனம் விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தில் விஜயராகவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது உடலை போலீசார் கைப்பற்றி வேடசந்தூர் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இந்த நிலையில், வேடசந்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்த விஜயராகவனின் உறவினர் ஒருவர், மது போதையில் அங்கிருந்து ஒரு இரும்பு கம்பியை எடுத்து மருத்துவமனையின் பிரசவ வார்ட்டில் இருந்த ஜன்னல் கண்ணாடிகளை உடைத்துள்ளார்.



அதே போல் இன்னொரு போதை ஆசாமி, பிரேத பரிசோதனை கூடத்தின் கதவை உடைக்க முயன்றார். து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த வேடந்தூர் போலீசார், மருத்துவமனை வளாகத்தில் மது போதையில் ரகளையில் ஈடு பட்ட 2 நபர்களை பிடித்துச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தால் வேடசந்தூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# பள்ளி வேனில் வைத்து 11ம் வகுப்பு மாணவி பாலியல் வன்கொடுமை டிரைவர் கைது




மயிலாடுதுறை, ஜூன் 13

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகாவை சேர்ந்தவர் மதுமோகன். இவருக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ள நிலையில், மனைவியிடம் இருந்து விவாகரத்து பெற்று தனியாக வசித்து வருகிறார். இவர் பள்ளி வேன் டிரைவராக பணியாற்றி வருகிறார்.

இந்தநிலையில், இன்று வழக்கம்போல, பள்ளியில் விடுவதற்காக மாணவ, மாணவிகளை ஏற்றிக்கொண்டு பள்ளிக்கு வந்துள்ளார்.அப்போது வேனில் இருந்த 11ம் வகுப்பு மாணவியை தவிர மற்ற அனைவரையும் இறக்கிவிட்ட மதுமோகன், அந்த 11ம் வகுப்பு மாணவியிடம்,ஒரு அசைமெண்ட் உள்ளதாக வேனில் சிறிது தூரம் அழைத்துச்சென்றுள்ளார்.


பின்னர் பள்ளி வேனிலேயே வைத்து மாணவியை வலுக்கட்டாயமாக பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். பின்னர், காலை 10 மணிக்கு அந்த மாணவியை பள்ளியில் இறக்கி விட்டுள்ளார். இது தொடர்பாக மாணவி தனது பெற்றோரிடம் தெரிவித்தார். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர், உடனடியாக போலீசில் புகார் அளித்தனர்.

இந்த புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், மதுமோகனை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# என்ஜினீயரிங் கலந்தாய்வு; மாணவர்களுக்கான ரேண்டம் எண் வெளியீடு

சென்னை, ஜூன் 13

தமிழகத்தில் என்ஜினீயரிங் படிப்புகளில் மாணவர்கள் சேர்வதற்கானவிண்ணப்பபதிவு கடந்த மே 5ந்தேதி தொடங்கி ஜூன் 6 ந்தேதி முடிவடைந்தது. நடப்பாண்டில் என்ஜினீயரிங் படிப்புகளில் சேர மாணவர்களிடையே ஆர்வம் அதிகரித்துள்ளது.



விண்ணப்பித்த மாணவர்களுக்கு விரைவில் கலந்தாய்வு நடைபெற உள்ளது.

இந்நிலையில், என்ஜினீயரிங் கலந்தாய்விற்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான ரேண்டம் எண் இன்று வெளியிடப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களுக்கும் தனித்தனியான 10 இலக்க எண் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் tneaonline.org என்ற இணையதளத்தில் சென்று பார்த்துக் கொள்ளலாம் என என்ஜினீயரிங் மாணவர் சேர்க்கைக்குழு தெரிவித்துள்ளது.

# சென்னையில் மின்சார வாகனங்களுக்கு சார்ஜிங் நிலையம் அமைக்க 9 இடங்கள் தேர்வு



சென்னை, ஜூன் 13

மின்சார வானங்களுக்கான சார்ஜிங் நிலையங்கள் போதிய அளவில் இல்லாததால் , மக்கள் மின்சார கார்களை வாங்க தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால் சார்ஜிங் நிலையங்களை அமைக்கும் முயற்சியில் அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இந்த நிலையில், சென்னையில் மின்சார வாகனங்களுக்கு சார்ஜிங் நிலையம் அமைக்க 9 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 2 வாரத்தில் டெண்டர் கோரப்பட்டு விரைவில் சார்ஜிங் நிலையங்கள் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும் என மாநகராட்சி தெரிவித்துள்ளது.

தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள்:

1) பெசன்ட் நகர், அஷ்டலட்சுமி கோயில் பார்க்கிங்,

2) பெசன்ட் நகர் கடற்கரை பார்க்கிங்,

3) அம்பத்தூர், மங்கல் ஏரி பார்க்கிங்,

4) தியாகராயர் நகர், மாநகராட்சி மைதானம் பார்க்கிங்,

5) தியாகராயர் நகர், சோமசுந்தரம் மைதானம்,

6)செம்மொழிப்பூங்கா, ஆயிரம் விளக்கு,

7) மெரினா கடற்கரை பார்க்கிங்,

8) அண்ணாநகர், போகன் வில்லா பூங்கா,


9) மயிலாப்பூர், நகேஸ்வரா ராவ் பூங்கா

முதல் விரைவில் 100 மின்சார தாழ்தள பஸ்கள் பயன்பாட்டிற்கு வர உள்ளது குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்த நிலையில் இருந்த மின்கம்பம் சீரமைப்பு

திருவாரூர், ஜூன் 13

கோட்டூர் ஒன்றியம் மீனம்பநல்லூர் களப்பால் செல்லும் சாலையில்சீலத்தநல்லூர்பயணிகள் நிழலகம் அருகில் வயல் ஓரமாக மின் கம்பம் ஒன்று சாய்ந்த நிலையில் இருந்தது. தற்போது கோடை மழை மற்றும் சூறைக் காற்று அடிக்கடி வீசுவதால் இந்த மின் கம்பம் எந்த நேரத்திலும் கீழே விழுந்து விபத்து ஏற்படக்கூடிய அபாயத்தில் இருந்தது.




இது குறித்த செய்தி நாளிதழில் வெளியானது. இதைத்தொடர்ந்து பள்ளன்கோவில் மின்வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு மின்கம்பத்தை சரி செய்தனர். இதனால் அந்த பகுதி விவசாயிகளும் பொது மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். மின்கம்பத்தை சரி செய்த அதிகாரிகள், ஊழியர்களுக்கும் செய்தி வெளியிட்ட நாளிதழுக்கும் அந்த பகுதி மக்கள் நன்றி தெரிவித்து உள்ளனர்.

# கடன் தொல்லையால் கார் டிரைவர் தூக்குப்போட்டு தற்கொலை

தஞ்சாவூர் ஜூன் 13

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை விவேகானந்தா நகரைச் சேர்ந்தவர் மீனாட்சி சுந்தரம் (40 வயது). கார் டிரைவர். இவருடைய மனைவி அதிர்ஷ்டலட்சுமி.

சம்பவத்தன்று காலை அதிர்ஷ்டலட்சுமி தூங்கி எழுந்து வந்து பார்த்த போது கணவர் மீனாட்சி சுந்தரம் வீட்டில் உள்ள உத்திரத்தில் சேலையால் தூக்குப்போட்டு பிணமாக தொங்கினார்.

இது குறித்து பட்டுக்கோட்டை நகர போலீஸ் நிலையத்தில் அதிர்ஷ்டலட்சுமி புகார் அளித்தார். இதன்பேரில் போலீசார் விரைந்து சென்று மீனாட்சி சுந்தரம் உடலை கைப்பற்றி பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

மீனாட்சி சுந்தரம் கடன் பிரச்சினை காரணமாக மன உளைச்சலில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. இது குறித்துபட்டுக்கோட்டை நகர போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நாம் தமிழர் கட்சி நடத்தவிருந்த போராட்டத்திற்கு அனுமதி மறுப்பு சீமான்

சென்னை ஜூன் 13

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

நாம் தமிழர் கட்சியின் வீரத்தமிழர் முன்னணி மற்றும் தெய்வத்தமிழ் பேரவை இணைந்து தமிழ் இறையோன் திருச்செந்தூர் திருமுருகப்பெருமான் கோவில் குடமுழுக்கை தாய்த்தமிழில் நடத்த வலியுறுத்தி வருகின்ற 14 062025 அன்று திருச்செந்தூரில் நடத்தவிருந்த அறப்போராட்டத்திற்கு தி.மு.க. அரசு அனுமதி மறுத்திருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

முதலில் போராட்டம் நடத்தஅனுமதித்தகாவல்துறை அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்ட பிறகு, கூட்டம் நடப்பதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்பு அனுமதி மறுப்பது எவ்வகையில் நியாயம்? முதலிலேயே காவல்துறைக்குத்தெரியாதாகுறிப்பிட்ட இடத்தில் போராட்டம் நடத்த அனுமதிக்கலாமா? கூடாதா என்று? அந்த இடத்தில் போராட்டம் நடத்தக்கூடாதென்றால் மாற்று இடத்தை முன்பே வழங்கி இருக்கலாமே? அதனைவிடுத்துபோராட்டம் நடத்தவே அனுமதி மறுப்பது ஏன்? எதனால்? யாருக்குப் பயந்து, யாருடைய உத்தரவின் பேரில் காவல்துறை முதலில் வழங்கிய அனுமதியை தற்போது மறுக்கிறது? திருச்செந்தூர் காவல் துறை அதிகாரிகளின் இத்தகைய அறமற்றச்செயல், தி.மு.க. ஆட்சியில் காவல்துறை எந்த அளவிற்குத் தரம்தாழ்ந்துவிட்டது என்பதையே காட்டுகிறது. வெட்கக்கேடு!

தமிழ்நாட்டில் தமிழ் முன்னோர்கள் கட்டிய தமிழர் இறையோன் முருகன் கோவில் குடமுழுக்கை தமிழில் நடத்தக்கூட போராட வேண்டி இருப்பதும், அதற்கும்கூட தமிழர் விரோத தி.மு.க. அரசு அனுமதி மறுப்பது பெருங்கொடுமையாகும்.

இந்தி எதிர்ப்புப் போரில்தமிழர்கள்செய்த அளப்பரிய ஈகங்களைத் தனதாக்கி, மொழிப்போர் மூலம் கிடைத்த முகவரியில் ஆட்சி அதிகாரத்தை அடைந்த தி.மு.க. அரசு கடந்த 60 ஆண்டுகளில் தமிழ் மொழியை மெல்ல மெல்லச்சிதைத்து அழித்துவிட்டது. 6 முறை தி.மு.க. தமிழர் நிலத்தை ஆண்ட பிறகும் தமிழ்நாட்டில் இன்றுவரை அன்னைத் தமிழ்மொழி வழிபாட்டு மொழியாகவோ, வழக்காட்டு மொழியாகவோ, பண்பாட்டு மொழியாகவோ, பயன்பாட்டு மொழியாகவோ, ஆட்சி மொழியாகவோ, அதிகாரமொழியாகவோ இல்லாத கொடுஞ்சூழல் நிலவுவது தமிழ்த்தேசிய இனத்திற்கு நிகழ்ந்த வரலாற்றுப் பெருந்துயராகும்.

'மணக்கவரும் தென்றலிலே குளிரா இல்லை? தோப்பில் நிழலா இல்லை? தணிப்பரிதாம் துன்பமிது தமிழகத்தின் தமிழ்த்தெருவில் தமிழ் தான்இல்லை' எனப்புரட்சிப்பாவலர் பாரதிதாசன் வருந்திப்பாடி, 70 ஆண்டுகளைக் கடந்தும் தமிழகத்தின்வீதிகளில்பெயர்ப் பலகைகூடத் தமிழில் இல்லாதிருப்பது எந்தவொரு இன மக்களுக்கும் நிகழ்ந்திடக்கூடாப் பெருங்கொடுமையாகும். அன்னைத்தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்று தமிழ்நாட்டு கோவில்களில் பலகையில் எழுதி அறிவிக்கும் அளவிற்குதான் அன்னைத்தமிழ் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அரசு அலுவலகங்களில் 'தமிழ் வாழ்க' என்று எழுதியதைத் தவிர, தி.மு.க. அரசு அன்னை தமிழின் வளர்ச்சிக்குச் செய்த நன்மை என்ன? தமிழ் வாழ்க என்று அரசு நிறுவனத்தில் எழுதி வைத்துவிட்டு தனியார் நிறுவனங்களைத் தமிழில் பெயர் வைக்கக் கோரி போராட்டம் நடத்தியவர்களை கைது செய்து கொடுமையும் புரிந்தது தி.மு.க. அரசு.

நாம் தமிழர் கட்சியின் வீரத்தமிழர் முன்னணி மற்றும் தெய்வத்தமிழ் பேரவை உள்ளிட்ட அமைப்புகள் சார்பாக, கடந்த 2020ம் ஆண்டு பிப்ரவரி5ம்தேதி,தஞ்சை பெரியகோவிலில் குடமுழுக்கு நிகழ்வானது தமிழ் மொழியில் நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்து சட்டப் போராட்டம் நடத்தி வெற்றிபெற்றோம். நீதிமன்ற ஆணையை அரசு ஏற்று அன்றைய அதி.மு.க. அரசு தஞ்சை பெருவுடையார் கோவிலின் குடமுழுக்கினை தமிழ் வழியில் நடத்த ஆவன செய்தது.

அதனைத் தொடர்ந்து அதே ஆண்டில் டிசம்பர் மாதம் நான்காம் தேதி கரூர் பசுபதீசுவரர் ஆலயக்குடமுழுக்குகுறித்தும் முன்கூட்டியே வீரத்தமிழர் முன்னணியும், தெய்வத்தமிழ் பேரவையும் தமிழ்வழியில் குடமுழுக்கு கோரி மதுரை ஐகோர்ட்டில் முறையிட்டது. இந்த வழக்கினை விசாரித்த நீதியரசர்கள் கிருபாகரன் மற்றும் புகழேந்தி ஆகியோர் அடங்கிய அமர்வு "தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்து கோவில்களுக்கும் குடமுழுக்கு நடக்கும்போது தமிழில் கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என்றும், அதை நிறைவேற்றத் தவறும் கோவில் நிர்வாகத்திற்கு 10 லட்சம் ரூபாய் அபராதம் என்ற வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கினார்கள். அதன் பிறகு, தமிழ் இறையோன் முப்பாட்டன் முருகனின் பழனி திருக்கோவிலின் குடமுழுக்கையும் தமிழில் நடத்த முதலில் தி.மு.க. அரசு மறுத்தபோதும், மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்ட பிறகு வேறு வழியின்றித் தமிழிலும் மந்திரங்கள் ஓதப்பட்டன. அதே நிலைதான் கடந்த 10.02.2025 அன்று கோவை பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோவிலில் குடமுழுக்கு நிகழ்விலும் அரங்கேறியது.



தமிழ்த்தேசிய அமைப்புகளின் அயராத முயற்சியின் விளைவாக தமிழில் குடமுழுக்கு நடத்த ஐகோர்ட்டே உத்தரவிட்ட பிறகும் அதனைக் கூட தி.மு.க. அரசு பின்பற்ற மறுப்பது தமிழ் மொழிக்கும், மண்ணுக்கும், அதிகாரம் அளித்த தமிழ் மக்களுக்கும் செய்கின்ற பச்சைத்துரோகமாகும்.

தமிழ்நாட்டில் அன்னைத்தமிழை கோபுரம் ஏற்ற ஒவ்வொரு முறையும் தமிழ்த்தேசியர்கள் வீதியில் இறங்கி போராடி போராடித்தான் உரிமை மீட்கவேண்டுமா? தமிழ், தமிழர் எனச் சொல்லி அதிகாரத்தை அடைந்த தி.மு.க. அரசிற்கு அந்த அக்கறை இல்லையா? உண்மையில் தி.மு.க. அரசே தமிழில் குடமுழுக்கை தாமாக முன்வந்து நடத்தியிருக்க வேண்டும். குறைந்தபட்சம் தமிழ்த் தேசிய அமைப்புகள் பெற்று தந்த நீதிமன்ற உத்தரவையாவது பின்பற்றி இருக்க வேண்டும். ஆனால், தி.மு.க. அரசு ஆட்சி அதிகாரம் கையில் உள்ள திமிரில் தமிழில் குடமுழுக்கு நடத்த வலியுறுத்தி தமிழர்களைப் போராட்டம் நடத்தும் நிலைக்குத்தள்ளி இருப்பதும், அந்தப் போராட்டத்திற்கும் அனுமதி மறுப்பதும் எதேச்சதிகாரத்தின் உச்சமாகும். இதன்மூலம் 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்!, 'வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்ற வசனங்கள் எல்லாம் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகச் சொல்லப்படும் தி.மு.க.வின் தேர்தல் காலவெற்று முழக்கங்கள் என்பது மீண்டுமொருமுறை நிறுவப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது பா.ஜ.க. முருகனைக் கையிலெடுத்து மதவாத அரசியல் செய்யவிருக்கும் நிலையில், அதனை முறியடிக்கும் வகையில் தி.மு.க. அரசே தமிழ் இறையோன்முருகனுக்கு தமிழில் குடமுழுக்கு நடத்தியிருக்க வேண்டும். ஆனால் முத்தமிழ் முருகன் மாநாடு என்ற பெயரில் நாடகம் நடத்திய தி.மு.க. அரசு, தற்போது சமஸ்கிருதத்தில் குடமுழுக்கு நடத்தி, பா.ஜ.க.வின் பீ டீமாக செயல்பட்டு, பிளவுவாத அரசியலுக்குத் துணை போவது வெட்கக்கேடானது.

ஆகவே, ஐகோர்ட்டு உத்தரவைப் பின்பற்றி தமிழ் இறையோன் திருச்செந்தூர்முருகன்கோவில் குடமுழுக்கை தமிழ்நாடு அரசு தாமாக முன்வந்து தாய்த்தமிழில் நடத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன். அதனைவலியுறுத்தி நாம் தமிழர் கட்சியின் வீரத்தமிழர் முன்னணி மற்றும் தெய்வத்தமிழ் பேரவை இணைந்து நடத்தவிருக்கும் அறப்போராட்டத்திற்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். அனுமதியளிக்க மறுக்கும் பட்சத்தில் தமிழ் மொழிக்காகத் தடையை மீறி கூட்டத்தை நடத்துவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடியில் ஆயுதங்களுடன் திரிந்த 2 வாலிபர்கள் கைது: பைக் பறிமுதல்




தூத்துக்குடி ஜூன் 13

தூத்துக்குடி வடபாகம் போலீஸ் இன்ஸ்பெக்டர் பாலமுருகன், சப்இன்ஸ்பெக்டர் சிவக்குமார் ஆகியோர் தலைமையிலான போலீசார் இரவு ரோந்து பணி மேற்கொண்டு மட்டக்கடை பகுதியில் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த மட்டக்கடை பகுதியை சேர்ந்த மாரிச்செல்வம் (வயது 21), ராசையா(எ) கலாம்(23) ஆகியோரை நிறுத்தி போலீசார் சோத னை செய்த னர். அப்போது அவர்களிடம் ஆயுதங்கள் இருந்தது தெரியவந்தது. இதனையடுத்து 2 பேரையும் கைது செய்த போலீசார், ஆயுதங்கள் மற்றும் மோட்டார் சைக்கிளையும் பறிமுதல் செய்து விசாரணை நடத்தினர்.

# தென்காசி: முதியோர் இல்லத்தில் 3 பேர் பலி திடுக்கிடும் தகவல்

தென்காசி, ஜூன் 13

தென்காசியில் தனியார் முதியோர் இல்லத்தில் உணவு ஒவ்வாமையால் 3 பேர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

உணவு ஒவ்வாமையால் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 11 பேரில் 3 பேர் உயிரிழந்தனர். மேலும் 2 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



இந்த சம்பவம் தொடர்பாக காப்பக நிர்வாகி ராஜேந்திரனை போலீசார்விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். தொடர்ந்து அவரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253


13.6.2025

# விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்




விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் Namma Family Group Founder and Chairman பொன்னுசாமி கார்த்திக் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வழங்கப்படுகின்றன இதனைத் தொடர்ந்து Athlete Association President திரு. பொன்னுசாமி கார்த்திக் (13/06/2025) வெள்ளிக்கிழமை அன்று அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று விழுப்புரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு அசைவ உணவு மற்றும் வேட்டி சேலைகளும் தாய் தந்தையை இழந்த 20 மாணவர்களுக்கு முழு கல்வி கட்டணத்தையும் பள்ளியில் செலுத்தி அவர்கள் படிப்பதற்கும் இதனைத் தொடர்ந்து இலவச மருத்துவ முகாம் பொன்னுசாமி கார்த்திக் உட்பட 30 இளைஞர்கள் ரத்த தானமும் இவர் உருவாக்கிய செயல் அறக்கட்டளையின் மூலம் மூன்று ஆண்டுகளில் 5 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் ஒரு பகுதியாக ஐந்தாயிரம் மரக்கன்றுகளும், 25 ஆயிரம் விதை பந்துகளும் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 100 விவசாயிகளுக்கு இலவச விவசாய உபகரணங்கள் மற்றும் இயற்கை மருந்து பொருட்கள்ஏழு பள்ளிகள் உட்பட 3500 மேற்பட்ட மாணவ மாணவியர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் பென்சில் ரப்பர்கள் விளையாட்டு உபகரணங்கள் அனைத்தையும் வழங்கப்படுகின்றனர் நிகழ்ச்சியில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்

# அசோக் லேலண்ட் மற்றும் அம்மன் ஆட்டோவின் வெள்ளக் கோவில் கிளையின் விரிவாக்கத் துவக்க விழா



வெள்ளகோவில்: அசோக் லேலண்ட் மற்றும் அம்மன் ஆட்டோவின் வெள்ளக் கோவில் கிளையின் விரிவாக்கத் துவக்க விழாவை முன்னிட்டு, சிறப்பு வாடிக்கையாளர் சந்திப்பு விழா வியாழன் 12.6.2025 சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது, அசோக் லேலண்டின் புதிய வாகனமான SAATHI 6 வாகனங்கள் வாடிக்கையாளர்களிடம் நேரில் டெலிவரி செய்யப்பட்டன.

விழாவில், அசோக் லேலண்ட் நிறுவனத்தின் டெரிடெரி மேனேஜர் திரு. ஜெகதீஷ்வரன், அம்மன் ஆட்டோவின் CEO திரு. ஷங்கர், திருப்பூர் கிளையின் வடக்கு மற்றும் தெற்கு பிரிவு மேலாளர்கள் ஸ்டீபன் மற்றும் செந்தில்குமார் ஆகியோரும், துணை மேலாளர்கள்ஜீவானந்தம், பெரோஸ்,தினேஷ் மற்றும் ஜான் அலெக்ஸாண்டர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் (13.6.2025)

மேஷம்: நன்றாக தோற்றமளிப்பீர்கள், முதலீடுகள் சிறப்பாக அமையும்; கடன்களை வசூலித்து புதிய திட்டங்களுக்கு நிதி பெற வாய்ப்பு உள்ளது. குடும்பமும் சமூகமும் ஆதரிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ரிஷபம்: வேலைசுமை அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்படவேண்டும். உடல் நலக் கவனமும், நிதி பழக்கங்களின் நிர்வாகமும் அவசியம்

மிதுனம்: நிறுவன செயற்கூறுகள் சாதகமாக இருக்கும். திறமை மற்றும் நிதியில் முன்னேற்றம் வரும்; Mercury transit மூலம் மேலும் பல நன்மைகள் .

கடகம்: புது சொத்து வாங்க செயல்திறன் உண்டு. வீட்டிலும் பணியிடத்தில் செழிப்பு காணப்படலாம் .

சிம்மம்: கலவையான அனுபவங்கள்; குடும்பத்தில் மகிழ்ச்சி, கல்வியில் முன்னேற்றம். பயண வாய்ப்பும் உண்டு

கன்னி: அதிர்ஷ்டம் கையில்; புதிய முதலீடுகளில் மிகுந்த கவனம் தேவை—மலிவு நிலைக்குள் பகிர்ந்து செயல்படுவது அவசியம் .

துலாம்: குடும்பத்தில் மகிழ்ச்சி; நேரத்தில் வேலை முடிப்பு உண்டு. மனநலக் கவனமும் தேவை .

விருச்சிகம்: சமூகவளமும் பகை நீங்கியும் உண்டு. உடல்நலப் பிரச்சனைகளுக்கு வஞ்சக தீர்வு வரும் .

தனுசு: நிதி பிரச்சனைகள் தீரும்; திருமண, வேலை, நிதி முன்னேற்றம் நடக்கும்.

மகரம்: வணிக வளர்ச்சி சந்தோசம் தரும். கல்வியில் சிறப்பு அனுபவங்கள் வந்து சேரும் .

கும்பம்: செலவில் கட்டுப்பாடு அவசியம், அதிக மகிழ்ச்சி மற்றும் நல்ல மாற்றங்கள் வரும் .

மீனம்: புதிய வருமான வாய்ப்புகள் திறக்கப்படும்; உணர்ச்சியில் சமநிலை பேணும் முயற்சிகள் தேவை.

# திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் பவுர்ணமியை முன்னிட்டு 2வது நாளாக அலைமோதிய பக்தர்கள் கூட்டம்



திருவண்ணாமலை, ஜூன் 13

வைகாசி மாதத்திற்கான பவுர்ணமி நேற்று முன்தினம் மதியம் 12.32 மணியளவில் தொடங்கியது. இதையொட்டி நேற்று முன்தினம் திருவண்ணாமலையில் காலையில் இருந்தே பக்தர்கள் கிரிவலம் சென்ற வண்ணம் இருந்தனர். இரவில் கிரிவலம் செல்லும் பக்தர்களின் கூட்டம் அதிகரித்தது. மேலும் கோவிலிலும் பக்தர்களின் கூட்டம் அலைமோதியது. பக்தர்கள் சுமார் 5 மணி நேரத்திற்கு மேல் வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர்.

பவுர்ணமி நீடித்ததால் பக்தர்கள் நேற்று விடிய, விடிய கிரிவலம் சென்றனர். கிரிவலம் சென்ற பக்தர்கள் அருணாசலேஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம் செய்ய குவிந்தனர். இதனால் 2வது நாளாக நேற்றும் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. பக்தர்கள் நீண்ட பொது தரிசனம் வழியில் சென்று சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களின் வரிசையானது கோவில் அருகில் இருந்து தேரடி வீதி வழியாக சென்று பெரிய தெரு வரையில் நீண்டு காணப்பட்டது. பக்தர்கள் கோவிலில் சாமி தரிசனம் செய்ய சுமார் 6 மணி நேரத்திற்கு மேலானதாக பக்தர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து நேற்று இரவு வரை பக்தர்கள் தனித்தனியாக கிரிவலம் சென்ற வண்ணம் காணப்பட்டனர். கிரிவலம் சென்று முடித்த பக்தர்கள்தங்கள்பகுதிகளுக்கு திரும்பி செல்வதற்காக பஸ்களிலும், ரெயிலிலும் அமர்ந்து செல்லும் வகையில் இடம் பிடிப்பதற்காக ஒருவரை ஒருவர் முண்டியடித்த படி ஏறினர். இதனால் பஸ் நிலையம் மற்றும் ரெயில் நிலையத்தில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால் அங்கு பரபரப்பாக காணப்பட்டது.

# அரசு மருத்துவமனை அருகே முட்புதரில் வீசப்பட்ட பச்சிளம் குழந்தை போலீசார் விசாரணை

திருவள்ளூர், ஜூன் 13

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி ஆறுமுகசாமி கோவில் தெருவில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை இயங்கி வருகிறது. நேற்று அதிகாலை 5 மணியளவில் அரசு மருத்துவமனை வளாகம் அருகில் உள்ள முட்புதரில் குழந்தையின் அழுகுரல் கேட்டுள்ளது. அப்பகுதியில் வசிக்கும் இளங்கோ (50 வயது) என்பவர் முட்புதர் அருகே சென்று பார்த்த போது, பிறந்து சில மணி நேரங்களே ஆன பச்சிளம் பெண் குழந்தை ஒன்று தொப்புள் கொடியுடன் துணியில் சுற்றி வீசப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக இளங்கோ, அந்த குழந்தையை மீட்டு திருத்தணி அரசு மருத்துவமனையில் அனுமதித்தார். மருத்துவர்கள் குழந்தையை இன்குபேட்டரில் வைத்து தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். இதுகுறித்து திருத்தணி போலீசார் வழக்குப்பதிவு செய்து அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்து வருகின்றனர். பச்சிளம் குழந்தையை சாலையோர முட்புதரில் வீசிச்சென்ற கல்நெஞ்சம் கொண்ட தாய் யார்? எதற்காக அவர் குழந்தையை வீசிச்சென்றார் என்பது உள்பட பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பேய்கள் என்னை அழைக்கின்றன உருக்கமான கடிதம் எழுதி விட்டு உயிரை மாய்த்த தொழிலாளி



நாகர்கோவில், ஜூன் 13

குமரி மாவட்டம் இரணியல் அருகே உள்ள குருந்தன்கோடு காடேற்றி பகுதியை சேர்ந்தவர் ராமசுப்பு (வயது 55), மர வேலை செய்து வருகிறார். இவருக்கு திருமணமாகி மனைவியும், 3 மகன்ளும், ஒரு மகளும் இருந்தனர். மகளுக்கு திருமணமாகி விட்டது. மூத்த மகன் இசக்கி முத்துகுமார் (33), வெல்டிங் வேலையில் ஈடுபட்டார். திருமணமாகாத அவர் கடந்த சில மாதங்களாகவே வேலைக்கு செல்லாமல் இருந்து வந்துள்ளார். இந்தநிலையில் நேற்று முன்தினம் காலையில் வெகு நேரமாகியும் இசக்கி முத்துகுமார் வீட்டு அறையில் இருந்து வெளியே வரவில்லை.

இதனால் சந்தேகமடைந்த குடும்பத்தினர் அவரது அறை கதவை வெகுநேரமாக தட்டினர். ஆனால் உள்ளே இருந்து எந்தவொரு சத்தமும் வரவில்லை. உடனே கதவை உடைத்து கொண்டு சென்றனர். அங்கு அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. உத்திரத்தில் இசக்கி முத்துகுமார் தூக்கில் பிணமாக தொங்கி கொண்டிருந்தார். அவருடைய உடலை பார்த்து குடும்பத்தினர் கதறி அழுதனர்.பின்னர் இதுகுறித்து இரணியல் போலீசில் புகார் அளிக்கப்பட்டது. அதன்பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இதைதொடர்ந்து வீட்டில் நடத்திய சோதனையில் இசக்கி முத்துகுமார் தற்கொலை செய்து கொள்ளும் முன்பு எழுதிய கடிதம் ஒன்று சிக்கியது. அதில், " தன்னை 2 பேய்கள் அழைப்பதாகவும்,ஆகவே அதனுடன் செல்கிறேன்" என்பன வாசகங்கள் உருக்கமாக எழுதப்பட்டிருந்தது. தற்கொலை செய்து கொண்ட இசக்கி முத்துகுமார் மது பழக்கத்திற்கு அடிமையானதாகவும், சற்று மனநலம் பாதிக்கப்பட்டு இருந்ததாகவும் போலீஸ் விசாரணையில் தெரியவந்தது. மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பேய்கள் அழைப்பதாக உருக்கமான கடிதம் எழுதி வைத்து விட்டு வெல்டிங் தொழிலாளி உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

# "மெட்ராஸ் மேட்னி" படத்துக்கு வந்த அதிர்ஷ்டம்




அறிமுக இயக்குநரான கார்த்திகேயன் மணி இயக்கத்தில் உருவான திரைப்படம் 'மெட்ராஸ் மேட்னி'. இப்படத்தில் காளி வெங்கட், சத்யராஜ், ரோஷினி ஹரிபிரியன், ஷெலி மற்றும் விஷ்வா முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்துக்கு கே.சி. பாலசரங்கன் இசையமைத்துள்ளார். இப்படத்தை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் வழங்க மெட்ராஸ் மோஷன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. படத்தின் ஒளிப்பதிவை ஆனந்த் ஜி கே, படத்தொகுப்பு சதீஷ் குமார், கலை வடிவத்தை ஜாக்கி மேற்கொண்டுள்ளனர்.

'மெட்ராஸ் மேட்னி' படத்தின் 'என்னடா பொழப்பு இது' எனத்தொடங்கும் பாடலை நடிகர் வடிவேலு பாடியுள்ளார். திரைப்படம் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

சமீபத்தில் வெளியான கங்குவா, தக் லைப் போன்ற பெரிய பட்ஜெட் படங்கள் வசூலில் பின் தங்கியுள்ளது ஆனால் சின்ன பட்ஜெட் படமான வாழை ,லப்பர் பந்து ,டூரிஸ்ட் பேமிலி போன்ற படங்கள் வெற்றி பெற்றுள்ளது. இந்த லிஸ்டில் சமீபத்தில் வெளியாகிய 'மெட்ராஸ் மேட்னி' படமும் இடம் பெற்றுள்ளது.

ஒரு மிடில் கிளாஸ் மனிதனின் வாழ்க்கையில் நேரும் சந்தோஷம்,துக்கம் பற்றிய கதை இது. இந்த திரைப்படம் சமீபத்தில் வெளியாகி மக்களின் அமோக ஆதரவை பெற்றுள்ளது . படத்தை பார்த்த இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ் படக்குழுவை நேரில்அழைத்து பாராட்டினார். மேலும் பிரபல திரைப்பட விநியோகஸ்தரான திருப்பூர்சுப்ரமணியம் சமீபத்தில் வெளியான படங்களில் மெட்ராஸ் மேட்னி படம் நல்ல வசூலை தந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் .இப்படி சிறிய பட்ஜெட் படங்கள் வெற்றி பெறுவது சினிமாவின் ஆரோக்கியத்துக்கு நல்லது என்று சினிமா விமர்சகர்கள் கூறுகின்றனர்.

# மிஷ்கின் குரலில் வெளியான "லவ் மேரேஜ்" பட பாடல்




கடந்த 2012ம் ஆண்டு வெளியான 'கும்கி' திரைப்படம் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமானவர் விக்ரம் பிரபு . அந்த படம் பெரும் வரவேற்பை பெற்றது. அதனைத்தொடர்ந்து, இவர் நடிப்பில் வெளியான 'டாணாக்காரன், இறுகப்பற்று, சிகரம் தொடு, இவன் வேற மாதிரி' உள்ளிட்ட படங்கள் நல்ல வரவேற்பை பெற்றன.

இவர் தற்போது அறிமுக இயக்குனர் சண்முக பிரியன் இயக்கத்தில் உருவாகியுள்ள 'லவ் மேரேஜ்' எனும் திரைப்படத்தில் நடித்துள்ளர். இதில் கதாநாயகியாக 'டொமினிக் அண்ட் தி லேடீஸ் பர்ஸ்' பட புகழ் நடிகை சுஷ்மிதா பட் நடித்துள்ளார். மேலும், மீனாட்சி தினேஷ், ரமேஷ் திலக், அருள்தாஸ், கஜ ராஜ், முருகானந்தம், கோடாங்கி வடிவேலு உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். இவர்களுடன் சத்யராஜ் சிறப்பு தோற்றத்தில் நடித்திருக்கிறார்.

மதன் கிறிஸ்டோபர் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்திருக்கிறார். கிராமிய பின்னணியில் பேமிலி என்டர்டெய்னராக தயாராகி இருக்கும் இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் பாடல்கள் வெளியாகி வைரலாகின.

திருமணம் தாமதமாவதால் ஒருவர், குடும்பத்திலும் சமூகத்திலும் எதிர்கொள்ளும் பிரச்சினை மற்றும் சிக்கல்களைப் பேசும் படமாக 'லவ் மேரேஜ்' உருவாகியுள்ளது. 'லவ் மேரேஜ்' படம் வருகிற 27ம் தேதி வெளியாகிறது.

இந்நிலையில், 'லவ் மேரேஜ்' படத்தின் 'எடுடா பாட்டலே' பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்பாடலை மோகன் ராஜன் வரிகளில் இயக்குனர் மிஷ்கின் பாடியுள்ளார்.

# "சென்னை சிட்டி கேங்ஸ்டர்ஸ்" படத்தின் "ஜில்லு ஜில்லு" வீடியோ பாடல் வெளியீடு

சென்னை 28, சரோஜா, கோவா படங்களில் நகைச்சுவை கதாப்பாத்திரங்களில் நடித்தவர் வைபவ். பின்னர், 'கப்பல், மேயாத மான்' போன்ற படங்களில் கதாநாயகனாக நடித்துள்ளார். இவரது நடிப்பில் சமீபத்தில் 'பெருசு' என்ற படம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

இதை தொடர்ந்து நடிகர் வைபவ், 'சென்னை சிட்டி கேங்ஸ்டர்ஸ்' என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை விக்ரம் ராஜேஷ்வர் மற்றும் அருண் கேசவ் இணைந்து இயக்கியுள்ளனர். இப்படத்தில் அதுல்யா ரவி கதாநாயகியாக நடித்துள்ளார். நகைச்சுவை படமாக உருவாகி உள்ள இதில் மொட்ட ராஜேந்திரன், ஜான் விஜய், ரெடின் கிங்ஸ்லி, சுனில் ரெட்டி, ஆனந்த் ராஜ், இளவரசு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். முழுக்க முழுக்க காமெடி நிறைந்த இப்படத்தின் டிரெய்லர் மற்றும் பாடல் சமீபத்தில் வெளியாகி வைரலாகின. இப்படம் வருகிற ஜூன் 20ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்தது. இப்படத்தின் டீசர் வெளியாகி வைரலானது. இந்நிலையில் 'சென்னை சிட்டி கேங்ஸ்டர்ஸ்' படத்தின் 'ஜில்லு ஜில்லு' பாடலின் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

# சச்சின் சாதனையை முறியடித்த ஸ்டீவ் ஸ்மித்



டெஸ்ட் கிரிக்கெட்டை வளர்க்கும் நோக்கில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கடந்த 2019ம் ஆண்டு உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் என்ற ஐ.சி.சி. தொடரைஉருவாக்கியது. இதன்முதலாவது சீசனில் நியூசிலாந்து அணியும், 2வது சீசனில் ஆஸ்திரேலிய அணியும் கோப்பையை கைப்பற்றின. இந்த 2 சீசன்களிலும் இந்திய அணி 2வது இடம் பெற்றது. இதனையடுத்து 3வது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி இங்கிலாந்தில் உள்ள லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நேற்று தொடங்கியது.

டாஸ் வென்ற தென்ஆப்பிரிக்கா பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய ஆஸ்திரேலியா அணி தென் ஆப்பிரிக்காவின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாத அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து 212 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. அதிகபட்சமாக வெப்ஸ்டர் 72 ரன்களும் ஸ்டீவ் ஸ்மித் 66 ரன்களும் அடித்தனர். தென் ஆப்பிரிக்கா தரப்பில் ரபாடா 5 விக்கெட்டும் யான்சன் 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.இதனையடுத்து பேட்டிங் ஆடிய தென் ஆப்பிரிக்கா அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. முதல் நாள்முடிவில் தென் ஆப்பிரிக்கா 4 விக்கெட் இழப்பிற்கு 43 ரன்கள் அடித்துள்ளது. கேப்டன் பவுமா 3 ரன்களுடனும் பெடிங்ஹாம் 8 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

இப்போட்டியில் அரைசதம் அடித்ததன் மூலம் சச்சினின் மிக முக்கியமான சாதனையை ஸ்டீவ் ஸ்மித் முறியடித்துள்ளார். ஐசிசி நாக் அவுட் போட்டிகளில் அதிக அரைசதம் அடித்தவர்களின் பட்டியலில் சச்சினை ஸ்டீவ் ஸ்மித் முந்தியுள்ளார்.

ஐசிசி நாக் அவுட் போட்டிகளில் சச்சின் 6 அரைசதங்கள் நடித்துள்ள நிலையில், ஸ்டீவ் ஸ்மித் 7 அரைசதங்கள் அடித்து சச்சினின் சாதனையை முறியடித்துள்ளார். அதே சமயம் இப்பட்டியலில் 10 அரைசதங்களுடன் யாரும் நெருங்க முடியாத உயரத்தில் விராட் கோலி உள்ளார்.

# சர்வதேச செஸ் போட்டிகளில் வென்ற தமிழக வீரர்களுக்கு உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து



தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நார்வே செஸ் போட்டியில் மூன்றாவது இடத்தை பிடித்த நடப்பு இளம் உலக சாம்பியனும், மேஜர்தயான் சந்த் கேல் ரத்னா விருது பெற்றவருமான .டி. குகேஷ், ஸ்டீபன் அவாக்யன் நினைவு செஸ் போட்டியில் முதலிடம் பிடித்த அரவிந்த் சிதம்பரம் மற்றும் இரண்டாம் இடம் பிடித்த ர. பிரக்ஞானந்தா ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

திரு. அரவிந்த் சிதம்பரம், ஸ்டீபன் அவாக்யன் நினைவு செஸ் போட்டியில் முதல் இடத்தை பிடித்ததன் மூலம் தற்போது FIDE உலக தரவரிசை பட்டியலில் முதல் 10தர இடங்களுக்குள் நுழைந்துள்ளார்.அரவிந்த் சிதம்பரம்

டி.குகேஷ் மற்றும்ர.பிரக்ஞானந்தா இருவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான எலைட் திட்டத்தின்கீழ் பயன் பெற்று வருகின்றனர்.

சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்கள் தங்களை மேலும் தயார்படுத்துவதற்காகதமிழ்நாடுஅரசின்எலைட்திட்டத்தின்கீழ்ஆண்டிற்கு30.00லட்சம்ரூபாய்வழங்கப்படுகின்றது, விளையாட்டு வீரர்கள் தங்களுக்கு தேவையான அதிநவீன உபகரணங்களை வாங்கிக் பயன்படுத்தவும், வெளிநாடுகளுக்கு சென்று சிறந்த பயிற்சியாளர்களிடம் பயிற்சி மேற்கொள்ளவும், தொடர்ந்து சர்வதேசவிளையாட்டு போட்டிகளில் பங்குபெற்று தங்களது திறமையை வெளிப்படுத்துவதற்காகவும் எலைட் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகின்றது.

நார்வே செஸ் போட்டி, ஸ்டீபன் அவாக்யன் நினைவு செஸ் போட்டி ஆகியவற்றில் முன்னணி இடங்களை வென்றதன்மூலம் உலக டாப் 10 தரவரிசையில் இருக்கும் நான்கு இந்திய வீரர்களில் மூன்று பேர் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் என்பது விளையாட்டில் உலக அளவில் முன்னணி இடமாக தமிழ்நாட்டினை உருவாக்கி வரும் துணை முதல்அமைச்சர்அவர்களின் முயற்சிகளுக்கு சிறப்பு சேர்பதாக அமைந்துள்ளது.என தெரிவிக்கப்பட்டுள்ளது .

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.